திராவிடநாடு

31—3—57 | வார வெளியீடு | விலை 2-அணா

“அருமை பெருமை”

காங்கிரசைக் கடைசி வரை எதிர்த்து அவர்களின் தவறுகளை தைரியமாக எடுத்துரைத்துத் தமிழ் நாட்டில் நல்லாட்சி தழைக்க நாளிலும் பொழுதிலும் பாடுபடக் கூடியவர்கள் — பாடுபட்டுப் பழகியவர்கள் — பாடுபடத் திடசங்கல்பம் செய்துகொண்டுள்ளவர்கள் தி. மு. க. வினர் என்பதை நாடு அறியும்.

தி. மு. க. சமீபத்திலேயே அரசியலில் நேரடித் தொடர்பு கொள்ள முனைந்த போதிலும் அதற்கு மக்களிடையே எவ்வளவு ஆதரவு இருக்கிறது என்பதை இத்தேர்தல் காட்டிவிட்டது. ஸ்தானங்களின் எண்ணிக்கையைப் பொறுத்த வரையில் சென்னை சட்டசபையில் 15-ம், பாராளுமன்றத்தில் 2-ம் மட்டுமே பற்றியிருந்த போதிலும் அதற்கு அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கையைப் பார்க்கும்போது, வேறெந்த எதிர்க் கட்சிக்கும் கிடைக்காத அளவு பெருந்தொகையான வாக்குகள் அதற்குக் கிடைத்திருப்பது தெரிய வருகிறது.

தி. மு. க.வை முன்பெல்லாம் திட்டியவர்கள்கூட இப்பொழுது அதன் அருமை பெருமைகளை அறிந்து அதைப் பாராட்டத் தலைப்படும் அளவுக்கு அது தமிழ் நாட்டில் பெரியதோர் ஸ்தாபனமாக வளர்ந்திருக்கிறது

—சுதந்திரன்.
இலங்கை.

THE SCHOOL OF ENGLISH LEARNING

ஆங்கிலக் கல்வி நிலையம்

60, பிராட்வே--மண்ணடி--சென்னை-1

தமிழ்
எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்
ஒரே
வருடத்தில்

இலக்கண ரீதியாக

இங்கிலீஷ் திருத்தமாக நேரில் கற்கலாம்

சென்ற வருட ஏப்ரல் மாதம் ஆரம்பமாகிய இங்கிலீஷ் வகுப்புகள் இந்த வருட ஏப்ரலில் முடிவடைந்தது.

புதிய வகுப்புகள்

ஏப்ரல் 10-ந் தேதி

ஆரம்பமாகின்றன

வகுப்பில் சேர விண்ணப்பம் செய்துகொள்ள

கடைசி தேதி 9--4--1957

முழு விவரங்களை நேரில் வந்து தெரிந்துகொள்க

இலக்கண ரீதியாக இங்கிலீஷில் பேசவும் சொந்தமாகக் கட்டுரைகள், கடிதங்கள் எழுதவும் அடிப்படையிலிருந்து கற்பிக்கப் படும். காலையிலோ மாலையிலோ வசதியான நேரத்தில் **வகுப்பிற்கு வந்து** ஒரு மணி நேரம் படித்தால் போதுமானது.

முக்கிய அறிவிப்பு:-

16 வயதிற்கு மேற்பட்டவர்களே இவ்வகுப்புகளில் சேரலாம். பெண்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள். சென்னை நகரில் உள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பித்துக்கொள்ளலாம்.

ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் இங்கு நடைபெறும் வகுப்புகளில் சேர்ந்து திருத்தமாகக் கற்றுப் பயனடையலாம்.



காஞ்சீபுரம்

31—3—57

தம்பி !

நீண்ட நாட்களுக்குப் பிறகு சந்திக்கிறோம்!
எத்தனை எத்தனை நாட்களாகிவிட்டன, நாம் உரையாடி!!
என்ன இருந்தாலும் இப்படியா ஒரே அடியாக, வாய்மூடிக் கிடப்பது!
மறந்தேவிட்டீர் என்றல்லவா எண்ணிக்கொண்டேன்!
இப்போதாவது, இப்படி ஒரு கடமை இருப்பது நினைவிற்கு வந்ததே!!

இவ்விதமும், இதற்கு மேலும் பலப்பல கூறிட எண்ணுகிறாய் — நானறிகிறேன் — ஆனால் அடுத்த கணமே, உனக்கு ஒரு புன்னகை மலர்ந்திடுகிறது, நான் காண்கிறேன்! பாவம், நமது அண்ணன் மீது தவறு இல்லை, அந்த அளவுக்குக் கடுமையாக உழைக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது — அந்தக் காரியத்தைச் செம்மையாகச் செய்துதீர வேண்டுமல்லவா, அதனாலேதான், கிழமைதோறும் நம்மிடம் பேசி மகிழும் வாய்ப்பையும் இழந்து நின்றிட நேரிட்டது என்று, தம்பி, உன் மனமே எடுத்துக் கூறுகிறது, முகம் மலருகிறது! ஆனால் உண்மையில், அது சமாதானமல்ல—இத்தனை கிழமைகளாக, இந்தக் காரணம் காட்டி, சந்திக்காமலிருப்பது, முறையே அல்ல! வேலை, ஆயிரம் இருக்கட்டும்! உழைப்பு கடுமையாகத்தான் ஏற்படட்டும்! அதற்காக, அன்புடன் உரையாடும் வாய்ப்பைக்கூடவா ஒதுக்கித் தள்ளிவிடுவது! அஃது எங்ஙனம் சரியாகும்! சரியல்ல! முறையல்ல! நான் ஒப்புக்கொள்ளவேமாட்டேன்!!

அவ்விதமானால், அண்ணா! நீ, என்னதான் சமாதானம் கூறப்போகிறாய், நாம் இத்தனை கிழமைகளாகச் சந்திக்காததற்குக் காரணம் என்ன காட்டப்போகிறாய்? என்று கேட்கிறாயா, தம்பி! கேள்!!

தம்பி! நாம், இத்தனை கிழமைகளாகச் சந்திக்காததற்குக் காரணமல்லவா, கேட்கிறாய்! நாம் சந்திக்காதிருந்தால்தானே, காரணம் காட்டவேண்டும்! நான் எங்கே, உன்னைக் காணாமல் இருந்தேன்! ஒவ்வொரு நாளும் நான் உன்னைப் பார்த்துப் பார்த்துப் பூரித்துக்கிடந்தேனே! ஒவ்வொரு புன்னகையிலும் பெருமூச்சிலும், வியர்வைத் துளியிலும் வீர முழக்கத்திலும், வாழ்த்தொலியிலும் வரவேற்பு உரையிலும், நான், உன்னைத்தானே கண்டேன்!! நான் எப்போது உன்னைக் காணாமலிருந்தேன், காணாததற்குக் காரணம் காட்ட!!

எண்ணங்களை எழுதிக்காட்ட இயலவில்லையே தவிர, நான் எந்தக் கணமும் உன்னைக் குறித்து எண்ணாமலிருந்ததில்லையே! வேறு என்னதான், இருக்கிறது, எனக்கு எண்ணி எண்ணிப் பெருமைப்பட, பூரிப்படைய!! எப்போதும், உன் நினைப்புதான்! எந்த இடத்திலும், உன்னைத்தான் கண்டேன்!!

★ படமும் பாடமும் (1)

காடு கரம்புகளிலே சுற்றிய போதும், கழனி வெளிகளில் நடந்த நேரத்திலும், ஏரிக்கரைகளில் நடந்தபோதும், ஊர்களைத் தாண்டிச் சென்ற சமயத்திலும், பட்டிதொட்டிகளிலேயும் சாலை சோலைகளிலேயும் உலாவிய போதும், பாட்டியிடமும் பெரியவரிடமும், துள்ளி விளையாடும் பிள்ளைப் பருவத்தினரிடமும், அரும்பு மீசை வாலிபரிடமும் நான் உற்சாகத்தைக் கண்ட போதும், உன்னைத்தானே சந்தித்தேன்!! எனவேதான், நீண்ட நாட்களாக நாம் சந்தித்தோமில்லை என்ற பேச்சே எழவில்லை; ஆகவே அதற்குக் காரணம் தேடிடவும் தேவை ஏற்படவில்லை! நாம், சில பல நாட்களாக, சந்திப்பதையும் உரையாடி மகிழ்வதையும், வழக்கமான முறையிலே அல்ல, புதியதோர் முறையிலே நடத்திக் கொண்டிருந்தோம். அந்தக் கட்டம் முடிவுற்றது. இனி நமது, பழையமுறை, துவக்கப்படுகிறது!!

அப்பப்பா! இந்த இரு திங்களுக்கு மேலாக, நாம் எத்துணை எத்துணை, கடுமையாக உழைத்திட வேண்டி நேரிட்டது; என்னென்ன விதமான தொல்லைகளையும் துயரங்களையும், இன்னல்களையும் எதிர்ப்புகளையும் காண வேண்டி வந்தது; புதியதோர் பொறுப்பை ஏற்றுக்கொண்டோம், அதனைத் திறம்பட நடாத்திக் காட்டியாக வேண்டுமே என்ற கடமை உணர்ச்சி, நம்மை எல்லாம் கடுமையாக உழைக்கச் செய்தது; எறிதழலில் தள்ளிவிட்டோம், இனி இதுகள் சாம்பலாகிப் போகும் காணீர்! என்று கருதினர்; தழல் பெரிது, கொடிது! எனினும், கழகம், குப்பை கூளமல்ல. குச்சிமிலாரல்ல, சாம்பலாகிப்போக! புடம்போட்டு எடுக்கப்பட்ட தங்கம் என்பார்களே அது போல, வெந்தழலில் கிடந்தது; தழல் அணைந்தது, தங்கம் கருகுமா; கழகம் இன்று தணலிலிட்ட தங்கமாகி நிற்கிறது! ஆனால் தம்பி, இந்த அரும் நிலைமையை அடைவதற்கு முன்பு, தணலிற் தள்ளப்பட்டுக்கிடந்த நாட்களிலே எத்துணை எத்துணை தவிப்பு! இவ்வளவையும், நம்மால் தாங்கிக் கொள்ள முடிந்ததே என்பதை, இப்போது எண்ணிக்கொள்ளும் போது, களத்திலே பெற்ற 'வடு' மீது காதலியின் கூந்தலிலே செருகப்பட்டுள்ள முல்லை பட்டால் என்னவிதமான களிப்பு ஏற்படுமோ, அதுபோலல்லவா இருக்கிறது.

நான் தம்பி, நமது கழகத்தின் வலிவு பற்றியும், தாங்கிக்கொள்ளும் சக்தி குறித்தும், எப்போதுமே நம்பிக்கையற்று இருந்ததில்லை, எனினும் தேர்தலில் நாம் ஈடுபடுகிறோம் என்ற நிலை உருவானதும், பீறிட்டுக் கிளம்பிய பேய்க்காற்றைக் கண்டபோது சிறிதளவு, நானே கலங்கிப்போனேன், கழகம் தாங்கிக்கொள்ளுமா என்பது குறித்து!! கரடி, கால்களைப் பிடித்து இறுக்கிட, மலைப்பாம்பு மரத்திலே சுற்றிக்கிடந்த நிலையில், வாய்திறந்து கழுத்தருகே அசைந்தாட, கரும்புலி மேலே பாய, தொலைவிலிருந்து செந்நாய்கள் சீறிட, புதரருகே நின்றபடி நரிக்கூட்டம், இரத்தம் குடித்திடச் சமயம் பார்த்திருக்க; கழுகுகள் மேலே வட்டமிட்டபடி இருக்க, வளைந்த வாளைக் கரத்திலே ஏந்திய ஓர் வீரன், இந்நிலையினின்றும், தன்னை விடுவித்துக்கொள்ளப் போரிடும் காட்சியை மனக் கண்ணாலே பார் தம்பி! அது போலல்லவா, தேர்தல்களத்திலே நமது நிலைமையிருந்தது! எப்படிச் சமாளித்தோம்!! எங்ஙனம் தாங்கிக்கொள்ள முடிந்தது!! எங்கிருந்து பெற்றோம், இத்துணை, பயங்கர எதிர்ப்புகளையும் எதிர்த்து நிற்கும் ஆற்றலை! எனக்கு வியப்புதான்! அதனாலே தான், இந்தத் தேர்தலில், நமக்கு வேதனை தரும் தோல்விகள் பல ஏற்பட்டபோதிலும், கழகத்தைப் பற்றிய நமது மதிப்பு உயர்ந்திருக்கிறது; கலக்கமடையவோ, மனம் உடைந்திடும் நிலை பெறவோ தேவையில்லை, என்று கூறிட முடிகிறது.

மண்ணைக் கவ்வினார்கள்!
டிபாசிட் இழந்தார்கள்!
படுதோல்வி அடைந்தார்கள்!
பத்திலோர் பாகம்தான்கிடைத்தது!

என்றுகொட்டை எழுத்துக்களில் நம்மைக் குறித்து, எழுதுகிறார்கள் பார்க்கிறோம் — ஆனால் பதைக்கவில்லை — பீதி அடையவில்லை — ஏன்?

ஏன்? என்பதற்கு, மாற்றார்கள் விடை காண முயலுகிறார்கள் முடியவில்லை!!

தம்பி! உன் ஆற்றலையும், தாங்கிக்கொள்ளும் சக்தியையும் அவர்களால் கணக்கெடுக்கத் தெரியவில்லை, எனவேதான், அவர்கள், பல இடங்களிலே இந்தப்பயல்கள் படுதோல்வி அடைந்தும், மண்ணைக் கவ்வியும், துளிகூட துக்கம் துளைத்திடும் நிலை பெறாமல், எப்போதும்போல 'எக்காள'மிட்டபடி இருக்கிறார்களே — ஏன்? ஏன்? என்று கேட்டுக் கேட்டுக் கலக்கமடைகிறார்கள்.

வேதனைதரும் தோல்விகள்
வெட்கப்படத்தக்க தோல்விகள்
எரிச்சலூட்டும் ஏமாற்றங்கள்
நம்பி மோசம்போன இடங்கள்

இப்படிப் பலப்பல கண்டோம்! இவைகளை, கேலிசெய்வதற்காக, கேவலப்படுத்துவதற்காக, இழித்தும் பழித்தும் பேசுவதற்காக மற்றவர்கள் கூவிக் கூவிக் காட்டுகிறார்கள்! அவர்கள் எந்த நோக்கத்துடன், அவ்விதம் செய்வதாயினும் பரவாயில்லை, விடாமல்

(14-ம் பக்கம் பார்க்க)

'HOME LAND'

ஆங்கில வார இதழ் மே மாதம் முதல் வெளிவர ஏற்பாடாகிவிட்டது என்பதை வாசகர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

நிர்வாகி.

முதல் கணை

ஆபத்து வருகிறது; அன்பர்காள், புதியதொரு ஆபத்து புறப்பட்டு வருகிறது!!

ஏப்ரலில் இருந்து இமயம் முதல் குமரி வரை டில்லியின் புதிய நாணய முறைஅமுலாகப் போகிறதாம். அந்த முறையோடு, நுழைக்கப்படவிருக்கிறதே, இந்தி—அதனையே, நாம் ஆபத்து என்கிறோம். நாணயச் செலாவணி—நமக்குப் புதிது அல்ல! ஆனால், புதுமை என்கிற போர்வையில் புகுத்தப்படுகிறது, இந்தி—அதனையே, நாட்டுக்குணர்த்த விரும்புகிறோம்.

தேர்தல் முடிந்துவிட்டது — எப்படியோ, காங்கிரசும் ஜெயித்து விட்டது — ஐந்தாண்டுக் காலத்துக்கு அதட்டிடவோ, அகற்றிடவோ இயலாது எனும் தைரியத்தில், டில்லி, இந்தியைத் திணிக்கும் இம்முறையைப் புகுத்துகிறது. வெற்றிபெற்ற காங்கிரஸ் நாட்டுக்கு வழங்கும் முதல் கைங்கரியம் வேறெதுவுமல்ல; ஆபத்து.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நாணயச் செலாவணி முறை இங்கே இருந்தது. நிக்கலும், வெள்ளியும் அல்ல; தங்கம் நடமாடிற்று, நமது மண்ணில்! உருவும் திருவும் வேண்டுமானால் இப்போது இருப்பதுபோல இல்லையே ஒழிய, தங்கப் பணம் நமது தரணியிலே உலவிற்று!!

சான்றுண்டோ, என்பீர்? தென் இந்தியாவிலுள்ள புராதனச் சமாதிக்குழிகளில் காணப்பட்டு, எடுக்கப்பட்டிருக்கின்றன என்கிறார் அன்பர் டி. எஸ். தண்டபாணி என்பார்!!

இங்குபோல, வட இந்தியாவிலும் அவர்களுக்கேற்ற நாணயச் செலாவணி முறை இருந்தது; ஆனால் இஸ்லாமியர் படையெடுப்பால் அது அழிந்தது; அந்தப் படையெடுப்புக்கு ஆளாகாத தெற்கிலோ நேற்றுவரை அந்தச் செலாவணி முறையின் 'அம்சங்கள்' இருந்தன; இதற்கும் சான்று வேண்டுமாயின், புதுக்கோட்டையிலும், திருவாங்கூரிலும் உலவிய **அம்மன் காசுகளையும் சக்கரங்களையும்** எடுத்துக்காட்டுவேன், என்கிறார்!!

தண்டபாணி, நிச்சயமாக, திராவிட முன்னேற்றக் கழகத் தோழர் அல்ல. ஏனெனில், இந்த விபரங்களை, கட்டுரையாக அவர் எழுதியிருக்கிற ஏடு, 'இந்து!'

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு,
தங்கச் செலாவணியிருந்ததாம், இங்கு!

எழுதுகிறார் அவர். தங்கத்தோடு, சில சமயங்களில் செப்புக்காசுகளும் இருந்தனவென்றாலும், தங்கமே மதிப்புற்று இருந்ததாம்—மக்கள் மன்றத்திலும் சரளமாக உலவிற்றும். தங்கத்தால் காசடித்து வாழ்ந்தோம், முன்பு! தரித்திரராகிப் பங்கப்பட்டு நிற்கிறோம், இன்று!!

தங்கம் வைத்திருக்கிற நாடு எதோ, அதையே ஐசுவரிய நாடெனப் போற்றி, உலகம் இன்று கொண்டாடுகிறது. டாலர் நாடாம், அமெரிக்கா அந்த ஏற்றத்தைப்பெற்று இறுமாந்து நிற்கிறது. முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு, கட்டாந்தரையாகவும், கல்லும் மண்ணுகவும் விளங்கிய அமெரிக்கா — இப்போது, தங்க நாடு! மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தங்கத்தால் காசடித்து, பாவலருக்கும் நாவலருக்கும் பொற்காசும் புகழ் முத்தும் அள்ளி வழங்கிய தேசம் இன்று தரித்திரர் தம் காடு!!

தங்கம் விளைந்த நாட்டிலே,
தரித்திரம் எதனாலே?
டில்லி தர்பாரைத் தட்டிக்
கேட்காததாலே!!

என்று இதனை உணர்ந்ததால் தான், எடுத்துச் சொன்னோம், இந்தத் தேர்தலில். "பார், பார், அடுக்குச் சொல்லை," என்று ஆளரசுகொள்ளவந்தோர், அழகு காட்டினரே ஒழிய, அதன் உண்மையினை உணர்ந்தாரில்லை! தமிழ் மண்ணின் ஒவ்வொரு பிடியிலும் நாட்டை வாழ்விக்கும் 'தங்கம்' இருக்கிறது — சில இடங்களில் நெல்லாக உளது — சில இடங்களில் கரும்பாக இருக்கிறது—கனியாக, இரும்பாக, இப்படி வளம் தரும் வகைகளில் ஏராளம் உள்ளது. இதைக்கொண்டு, வேண்டிய தங்கத்தை, ரோமாபுரியிலிருந்தும் கிரேக்கத்திலிருந்தும் அள்ளிக் கொணர்ந்தோம் ஒரு காலத்தில்! அதுமட்டுமல்ல, உண்மையான தங்கம் கிடைக்கும் தங்க வயல்களும் உண்டு தமிழகத்தில்!!

ஆனால், வளமும் வாழ்வும் இன்று வடவர் கையிலேயிருப்பதாலே, வாழ்க்கையின் எல்லாப் பிரிவுகளிலும் வாட்டமும் சோர்வும் ஏற்படுகிறது.

இதனையே எடுத்துரைத்தோம், இத் தேர்தலில்!!

ஏளனம் செய்தோர், கவனத்துக்கு, இதோ வருகிறது, ஆபத்து!!

அழகான நாணயச் செலவாணி முறை, மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் இருந்தது. காசும் பணியும் கலகலவெனப் பேசிடும் பேச்சரவம் தமிழகத்தின் வீதிகளிலெல்லாம்கேட்டது! காற்பணமும் அரைப் பணமும், வராகனும், இன்னபிற முறைகளும் அப்போதே வரையறுக்கப்பட்டிருந்தன இங்கு!! கொஞ்சுதமிழில் குறிக்கப்பட்டிருந்த அந்தச் சொற்கள் மீண்டும் எழவேண்டிய சமயம் இது; சுயராஜ்ய தேசம். ஆனால், இதோ, இந்தி வருகிறது நாணயத்தில்! நயே பைசேவாம்!!!

நயா பைசா என்றால் ஒரு பைசாவுக்குப் பெயராம். ஒன்றுக்கு மேற்பட்ட பைசாக்களுக்கு நயே பைசே என்று பெயராம்!! விளக்கம், வெளிவந்துள்ளது ஏடுகளில்.

முடியுடை மூவேந்தர்களாக வாழ்ந்த முப்பெரும் மன்னர்களாம் பாண்டியனும், சோழனும், சேரனும், தத்தமது சின்னங்களை தத்தமது நாணயங்களில் பொறித்திருந்தனராம்! பாண்டியன் மீனையும், சோழன் புலியையும், சேரன் வில்லையும் தங்களுடைய நாணயங்களில் பொறித்திருந்தனராம்!!

சோழன் நாட்டை பாண்டியன் வென்றால், அங்கு, இருவரது சின்னங்களும் பொறித்த காசுகள் உலவினவாம்!!

எழுதுகிறுர், மேலே சொன்ன தணடபாணி. தெளிவாகவே எழுதுகிறுர், உண்மையை மறைத்திடலாகாது எனும் உயர்ந்த எண்ணத்துடனேயே எழுதுகிறுர்,

சேர,
சோழ,
பாண்டிய
எனும் மூன்று திராவிட அரசுகள்!!

என்று. இந்த மூன்று திராவிட அரசுகளும் மீன் உருவும், புலிச் சின்னமும், வில் முத்திரையும் பொறித்த பொற்காசுகளைக் கொண்டு நாணயச் செலவாணியைச் செய்து வந்தனர் அக்காலத்தில்! தாமிரபரணியின் முகத்துவாரத்திலிருந்த காயல்பட்டினத்தே அராபிய நாட்டுக் குதிரைகள், கப்பல்களில் வந்து இறங்கிய காலம் அது. எழுதுகிறுன் மார்க்கோ போலோ எனும் அந்நியன், "ஒரு குதிரை 500 பொற்காசு (சாகி) பெறும். ஒவ்வொரு ஆண்டும் அராபியர் ஏறக்குறைய 1400 குதிரைகள் கொணர்ந்தனர்," என்பதாக. அந்தப் பொற்காலம் எங்கே! இந்தப் புழுதிக் காலம் எங்கே!!-என்பதை எண்ணி மனம் புண்ணுவதால்தான், தங்கம் விளையும் நாட்டிலே தரித்திரம் ஏதனுலே, டில்லி தர்பாரைத் தட்டிக் கேட்காததாலே என்று கூறுகிறேம்.

தங்கம் இழந்தோம் என்பது மட்டுமல்ல, அந்தத் தங்கத்தை விட மேலானதென்று நாம் கருதிக்கொண்டிருக்கும் தமிழுக்கும் ஆபத்து வருகிறது—இப்போது! நயேபைசேதான்—இனி நாணயத்துக்குப் பெயராம்!

இந்தியினைக் கட்டாயமாக்குவோம்—என்றனர்.

தமிழர் சமுதாயம் தாலமுத்து நடராசன்களைத் தத்தம் செய்து இந்தியைத் தடுப்போம்—என்றது.

விட்டிடமாட்டோம்!—என்று பிறகு விதண்டாவாதம் பேசினர்.

தூங்கும் புலிகள்யாம்! கோழைகளல்ல!—என்றது, தமிழகம்.

இதைக்கண்ட வடவர், வஞ்சகத்தைத் துணைக்கழைத்து, அதன் ஒரு கட்டமாக, மனிதனின் வாழ்வில் இன்றியமையாத அங்கம் வகிக்கும் நாணயச் செலாவணி முறையில் இந்தியைப் புகுத்துகிறுர்கள்! இனி, பாரதரத்னபர மார்த்தீக அய்யங்கார்மட்டுமல்ல, பட்டிக்காட்டு பரமனும், புல் தூக்கும் கருப்பியும் கூட 'நயேபைசே' என்றுதான் சொல்லவேண்டும்!

பாய்ந்துவந்தால் தமிழர் தம் வேல் பாயும் என்று அச்சத்தில் புலி பதுங்கி வரத் திட்டம் தீட்டியுள்ளது! அந்த நாள் முதற்கொண்டு இந்த நாள்வரையிலே, தமிழை, வடமொழி சாய்த்ததாகச் சரிதம் கிடையாது; கல் தோன்றி, மண்தோன்ருக் காலத்தே முன்தோன்றி மூத்த தமிழ் என்பர், புலவர்கள். அந்த முதுமொழியிருந்த இடத்திலே, 'இந்தி'யின் மூலம் சமஸ்கிருதத்தைப் பரப்ப, திட்டம் தீட்டப்படுகிறது, டில்லியில்.

திட்டக் கமிஷனின் துணைத் தலைவராக இருக்கும் வி. டி. கிருஷ்ணமாச்சாரி என்பார் மார்ச் 17-ந் தேதியன்று பீகார் சம்ஸ்கிருத சமிதிபட்டமளிப்பில்,

"இந்தி வளரவேண்டுமேயானல் சமஸ்கிருதம் போற்றி வளர்க்கப்படவேண்டும்"

என்று கூறுகிறுர்! இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதுவும் ஒன்றுபோலும்!

டில்லிக்குத் திட்டத்தைத் தீட்டித் தரும் 'பெரியவரது' ஆசைதான் இது என்ருல், திட்டங்களை நிறைவேற்ற பணத்தை எடுத்து அளிக்கும் நிதி அமைச்சர் பொறுப்பிலிருக்கும் டி. டி. கிருஷ்ணமாச்சாரி சமீபத்தில் சென்னை விவேகானந்தா கல்லூரி தென்னிந்திய பல்கலைக் கழக ஆசிரியர்கள் சங்கக் கூட்டத்தில் பேசுகையில் தெளிவாகவே வெளியிட்டிருக்கிறுர்,

"எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் பொதுமொழியே போதன மொழியாக இருக்கவேண்டும். இந்தியாவின் பொதுமொழி எதுவென்ருல், இந்தி. ஆகையால் இப்பொழுதிருந்தே ஏற்பாடுகள் செய்யவேண்டும்."

என்பதாக. ஆசிரியர்களைப் பார்த்து, இப்பொழுது முதலே, இதற்குத் தயாராகும்படி தெரிவித்திருக்கிறுர்!!

நாணயத்தில் புகுந்துவிட்டது இந்தி.

நாளை, பட்டப்படிப்பிலும் இந்தி போதனமொழியாகும் என்கிறுர், டில்லி மூல்வர்.

இந்த ஆபத்துகள் ஏற்படும் என்பதாலேயே, டில்லியின் தொடர்பு கூடாது என்று கூறுகிறேம், நாம்—திராவிடத் தனியரசு வேண்டுமென்கிறேம்.

திராவிடநாடாவது!—என்று கேலிசெய்த 'இந்து'வே, சேரனும் சோழனும் பாண்டியனும் ஆண்ட இடங்களை திராவிட அரசுகள் என்று குறிக்கிறது.

திராவிடம் பிரிந்தால்தான்' திராவிட மொழிகள் வாழும், அவைகளில் ஒன்ருன தமிழ் மணக்கும், தமிழ் நாடு சிறக்கும் என்று கூறுகிறேம் நாம்.

"ஏன், திராவிடம் பிரியாமலே, தமிழை வளர்க்க முடியாதா? இதோ நாங்கள் தமிழை, அரசு மொழியாக்கவில்லையா?" என்று தேர்தலிலே பவனிவந்த சுப்பிரமணியம் கேட்டார்.

அவருக்கு, தேர்தல் முடிந்து, மெஜாரிடி உளது என்பதும் புரிந்ததும், டில்லி அளிக்கிறது பதில்—உத்தரவுமூலம்!

நயே பைசே வருகிறது! நயே பைசே!!

காமராஜர் கட்டியணைத்து உச்சிமோந்து ஆதரித்த, டி. டி. கே. கூறுகிறுர், "போதனமொழியாகவே, இந்தி வரவேண்டும்" என்று.

இதுகாறும், கல்லூரிகளில் கூட தமிழே போதன மொழியாக வேண்டும் எனக் கூறிவந்தவர், சுப்பிரமணியம்! தேர்தல் முடிந்து 'ஜயபேரிகை'யும் கொட்டப்பட்ட நேரமாகப் பார்த்து, இந்தி நுழைகிறது—கல்லூரி மொழியாகவும் அது ஆகும் என்று அறிவிக்கப்படுகிறது!

தங்கத் தரணியைத்தான் சுரண்டக் கொடுத்துவிட்டு சல்லிக் காசுக்கும் பிச்சையெடுக்க வேண்டியவர்களாக நிற்கிறது தெற்கு! தாய்மொழிக்கும் அந்தக் கேடுண்டு, கபர்தார், என்று தட்டிச் சொல்லுகிறது டில்லி!!

★

நகைச்சுவை அரசியலில்!

நம்முடைய அரசியல்வாதிகளிடத்து புன்னகையைக் காண்பது அரிது ஆனால் வெளிநாடுகளில் நகைச்சுவையும் கிண்டலும் அரசியல் துறையில் ஒரு அம்சமாக விளங்குகின்றன. அவைகளில் சில:—

இங்கிலாந்தில் லார்டுநார்த் என்பார் பிரதமராக இருந்த காலம்! கப்பல் கட்டும் தொழில் பற்றிய விவாதம்நடந்துகொண்டிருந்தது. வழ, வழா என்று பேசக்கூடிய ஒருவர் எழுந்து சரித்திர பூர்வமான விபரங்களை யெல்லாம் பேசலானார். முதன் முதலாக 'நோவாய் ஆர்க்' என்கிற கப்பல் கட்டத் தொடங்கிய நாட்களில் தனது பேச்சை ஆரம்பித்து, படிப்படியாக அதன் வளர்ச்சியை விவரித்து, ஸ்பானிஷ் கப்பற்படை கட்டப்பட்ட கட்டத்திற்கு வந்து கொண்டிருந்தார். அவர் பேசத் துவங்கியதுமே, கண்ணை மூடிக்கொண்டு தூங்க ஆரம்பித்துவிட்டாராம் லார்ட்நார்த், குறிப்பிடத்தக்க விவரம் இருந்தால் குறித்துக்கொள்ளும்படி சர்கிரே காப்பர் என்பவரிடம் சொல்லிவிட்டு. அவர் இவ்விதம் செய்வது வழக்கமாம். மதிப்பிற்குரிய உறுப்பினர் சாவகாசமாக ஸ்பானிஷ் கப்பற்படையின் சமீபத்தில் வந்து கொண்டிருந்தபோது, சர் கிரே, தவறுதலாக பிரதமரை உசுப்பிவிட்டுவிட்டார். கண்விழித்த பிரதமர், "கனம் அங்கத்தினர் இப்போது எந்த சகாப்தத்துக்கு வந்திருக்கிறார்?" என்று கேட்டாராம். "இப்போதுதான்எலிசபெத்ராணியின் ஆட்சியின் காலத்திலிருக்கிறோம்!" என்று கிரே பதிலிறுக்க......"அப்படியானால் இன்னும் ஒரு நூற்றாண்டு மிச்சமிருக்கிறதே!" என்று கூறிவிட்டு லார்டுநார்த் கண்களை மூடிக்கொண்டாராம்.

✱

சர்ச்சிலின் பதில்கள் பிரசித்தமானவை! ஒருசமயம் ஒரு பெண் பார்லிமெண்டு அங்கத்தினர் மிகவும் கோபத்தோடு, சர்ச்சிலைப் பார்த்து, "நீர் என் கணவனாக இருந்தால் உமக்கு விஷம் கொடுத்திருப்பேன்" என்று கர்ச்சித்தாராம். அதைக் கேட்ட சர்ச்சில் மிகவும் நிதானத்தோடு அந்தப் பெண்ணைப் பார்த்து, "நீங்கள் என் மனைவியாக இருந்தால் அதை மகிழ்ச்சியோடு உட்கொண்டிருப்பேனே!" என்றாராம்.

✱

நாடகங்களில் வல்லவரான எழுத்தாளர் ஷெரிடான் ஒருமுறை சபையில் பார்லிமெண்டு அங்கத்தினர்களில் பாதிப் பேர் கழுதைகள் என்று கூறிவிட்டார். உடனேபார்லிமெண்டில், "வாபஸ் வாங்கவேண்டும்! வாபஸ் வாங்க வேண்டும்!" என்கிற பலத்த கூச்சல் எழும்பிற்றும். உடனே, ஷெரிடான் எழுந்து, "நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுகிறேன். சபையிலிருக்கும் அங்கத்தினர்களில் பாதிப்பேர் கழுதைகள் அல்ல!!" என்று கூறிவிட்டு உட்கார்ந்தாராம்.

✱

அடிமைகளின் விடுதலைக்காகப் போராடிய வில்லியம் வில்போர்சைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கலாம். அவருடைய சகோதரி 'மிஸ்' வில்போர்ஸ் என்பவர் தனது அண்ணன் சார்பில் தேர்தல் பிரச்சாரம் செய்யும் போது, பேசி முடித்ததும் கூட்டத்திலிருந்த ஒருவர் "நான் என்றைக்கும் 'மிஸ்' வில்போர்சையே ஆதரிப்பேன்" என்று கத்தினாராம். அந்த அம்மையார், நகைச்சுவை ததும்ப, "கனவானுக்கு நன்றி. ஆனால், நான் எப்போதும் இன்று போல் 'மிஸ்' (குமாரி)யாகவே இருக்க முடியாதே என்று வருந்துகிறேன்" என்றாராம்.

✱

ஆபிரகாம் லிங்கனைப்பற்றி அறியாதார் இருக்க முடியாது. மிகவும் எளிய வாழ்க்கை நடத்திய பெரியார் அவர். அவரது காரியதரிசி ஒரு அவசர வேலையாக அவரைத் தேடிக்கொண்டு வந்தபோது அமெரிக்கக் குடியரசுத் தலைவரான அவர், தனது பூட்சுகளுக்கு 'பாலிஷ்'போட்டுக்கொண்டிருந்தாராம்; அதைக் கண்ட காரியதரிசி, "உங்கள் பூட்சுகளுக்கு நீங்களே பாலிஷ் போடுகிறீர்களே?" என்று கேட்டாராம். லிங்கன் தலைநிமிர்ந்து, அவரைப் பார்த்து..."ஆமாம் நீங்கள் யார் பூட்சுகளுக்குப் பாலிஷ்போடுகிறீர்கள்?" என்றாராம். ஏன் பேசப் போகிறார், காரியதரிசி, பிறகு!

✱

இலண்டனுக்குப் போயிருந்தபோது குருஷேவ் கூறிய தகவல் இது:—

சுப்ரீம் சோவியத் கூட்டத்தில் ஸ்டாலின் செய்த தவறுகளை அவர் எடுத்துரைத்துக்கொண்டிருந்தாராம். அப்பொழுது கையெழுத்தில்லாத ஒரு குறிப்பு அவரிடம் தரப்பட்டதாம். "இதெல்லாம் நடந்தபோது நீர் என்ன செய்துகொண்டிருந்தீர்?" என்று அந்தக் குறிப்பில் கேட்கப்பட்டிருந்ததாம். "இந்தக்குறிப்பை அனுப்பியது, யார்?" என்று குருஷேவ் கூட்டத்தினரைக் கேட்டாராம். ஒருவரும் முன்வந்து பதில் சொல்லவில்லை. எப்படிச் சொல்லுவர்? மௌனம்நிலவியதைக்கண்ட குருஷேவ், பெரிய புன்முறுவலுடன், "இப்போது என்ன காரணத்திற்காகப் பேசாமலிருக்கிறீர்களோ இதே காரணத்தினால்தான் நானும் அப்போது ஒன்றும் பேசவில்லை" என்று தெரிவித்தாராம்.

✱

இரண்டாவது உலகப்போரில் நாஜிகள் பிரான்சை ஆக்ரமித்தபோது நகைச்சுவை எழுத்தாளரான பி. ஜி. உட்ஹவுஸ் என்பவரைச் சிறை பிடித்துவிட்டனர். அவரைத் துப்பாக்கி முனையில் நிறுத்தி நாஜிகளைப்பற்றி பிரிட்டிஷார் தவறான அபிப்பிராயம் கொண்டுள்ளார்கள் என்று ரேடியோவில் பேசும்படி செய்தனர். அவர்கள் சொல்கிறபடி செய்யாவிடில் உயிருக்கு ஆபத்து என்பதை அறிந்து அவர் ஆங்கில வாசகங்களின் உட்பொருளை ஜெர்மானியர் அறியமாட்டார்கள் என்ற உண்மையைப் பயன்படுத்திக்கொண்டு "எங்களை நன்றாக நடத்துகிறார்கள்" என்றுசொல்லிவிட்டு, "இதைக் கப்பற்படையினருக்கு தெரிவியுங்கள்" என்று கடைசியில் குறிப்பிட்டாராம். கடைசியில் அவர் சொன்ன வாசகத்தின் பொருள் என்னவென்றால் நான் ஏற்கனவே கூறியதெல்லாம் சுத்தப் பொய் என்பதாகும்!!

★

தமிழில் நாடகங்கள்

நாடகம் ஆண்கள், பெண்கள், இளையோர், முதியோர், படித்தவர், படியாதவர் யாவருக்கும் நல்லறிவை யூட்டுமென்பதில் யாதும் ஐயமில்லை. ஒரு சமயம் திருமதி சரோஜனி தேவியார் "நாடகசாலை சாதாரண மக்களின் சர்வகலாசாலை" என்று கூறியிருக்கின்றனர். இது முற்றிலும் உண்மையே. கண்ணால் பார்க்கும் பொழுது ஏற்படக்கூடிய ஒரு உணர்ச்சி காதால் கேட்கும் பொழுது உண்டாக மாட்டாது. இதனாலேயே ஆங்கிலத்தில் இரண்டு காதுகளுக்கு ஒரு கண் ஒப்பாகும் என்னும் பழமொழி வழங்கி வருகிறது.

நாடகத் தமிழ், நாடகத் தமிழ் என்று கூறித் தமிழ் மக்கள் அனைவரும் பெருமை பாராட்டிக் கொள்வதுண்டு. ஆனால் தமிழ் மொழியில் குறவஞ்சி, பள்ளு முதலியவைகளைத் தவிர பாத்திரங்களும் பிறவும் வகுத்து வழங்கும் 'சாகுந்தலம்' 'ஹாம்லெட்' முதலிய நாடகங்களைப் போன்ற நாடகங்கள் ஆதி காலத்தில் இருந்தனவோ என்பது சந்தேகமே. பண்டிதர்களைக் கேட்டால் நம் இலக்கியச் செல்வங்களெல்லாம் கபாடபுரத்தைக் கடல் கொண்டு போனதோடு போய்விட்டன என்று கூறி வாயடைத்து விடுகின்றனர். கடல் கொண்டு போன நாடக நூல்கள் இனி கரையேறி வரப் போவதில்லை. சிலப்பதிகாரம் அரங்கேற்று காதைக்கு அடியார்க்கு நல்லார் எழுதியிருக்கும் உரையை அப்படியே திருப்பித் திருப்பிச் சொல்லிப் பழம் பெருமை பாராட்டிக் கொள்வதிலும் பயன் பெறமாட்டோம். இன்று தமிழில் நல்ல நாடகங்கள் இல்லாத குறை, குறையாகவே இருக்கின்றது. அதை நிவர்த்தி செய்ய வேண்டுவது தமிழறிஞர்களின் கடமையாகும்.

தற்காலம் தமிழில் வெளிவரும்நாடகங்கள் பெரும்பாலும் புராணக் கதைகளைத் தழுவி எழுதப்பட்டவைகளாகவே இருக்கின்றன. இங்கிலைமாறி 'இப்ஸன்' 'பர்னட்ஷா' முதலிய மேலைநாட்டு ஆசிரியர்கள் எழுதி வரும் நாடகங்களைப் போன்ற சமுதாய முன்னேற்ற நாடகங்களும் வெளிவர வேண்டுவது மிக்க அவசியமாகும்.

நாடகக் கலை அபிவிருத்தி அடைய வேண்டுமானால் நாடக ஆசிரியர்கள் மட்டுமல்ல, நடிகர்களும் நல்ல தேர்ச்சியுள்ளவர்களாயிருக்க வேண்டும். ஒரு நடிகன் ஒரு பார்வையினால் அல்லது ஸ்வர பேதத்தினால் விளக்கும் உண்மையை ஒரு ஆசிரியர் பத்துப் பக்கங்கள் எழுதினாலும்கூட விளக்கிக் கொள்ளமாட்டார். மேனாட்டு நாடகாசிரியர் ஒருவர் நாடகம் பார்க்கச் சென்றிருந்தார். அன்று அவரால் எழுதப்பட்ட கதையொன்று தேர்ச்சியுள்ள நடிகர்களால் அங்கு நடிக்கப்பட்டது. நடிப்பைப் பார்த்ததும் அவர்பிரமித்துவிட்டார். ஆகா! நான் நினைத்திராத எவ்வளவோ விஷயங்கள் இந்த நடிப்பிலிருந்து விளங்குகின்றனவே! என்று ஆச்சரியப்பட்டாராம். ஆதலால் நடிகர்களும் நாடகக்கலையின் அபிவிருத்தியின் பொருட்டுக் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டியது அவசியமாகும்.

நாடகம் பார்க்கும் ரசிகர்களும் குண குற்றங்களை எல்லாம் பட்சாதாபமின்றி எடுத்துக் கூற வேண்டும். நாடகக் கலையால் மக்களும், மக்களுடைய ஆராய்ச்சி அறிவினால் நாடகக் கலையும் திருந்தி வருமென்பது உறுதி.

ஆதிகாலத்தில் தமிழில் நாடகம் இருந்ததோ இல்லையோ என்ற ஆராய்ச்சி அவசியமேயில்லை; இப்பொழுது அரிச்சந்திரனாயிருக்கிற ஒருவன் அவனுடைய முப்பாட்டன் கப்பலோடி வியாபாரியாயிருந்தான் என்ற கதையைக் கூறிக்கொண்டிருப்பதினால் யாதும் பயனுண்டா? தரித்திரன் முயற்சி செய்து குபேரன் ஆவதில் ஆட்சேபமில்லை. இத்துறையில் நாம் முயன்று முன்னேறுவோமாக.

—தேவி.

அகத்திலா? புறத்திலா?

—[மா. கி. த.]—

சங்க இலக்கியங்களைத் தொகுத்துப் பிரித்துப் பாகுபாடு செய்து வைத்தவர்கள், தமிழ் இலக்கியத்திற்குப் பெரும் தொண்டுசெய்தவர்களாகின்றார்கள். அகநானூறு புறநானூறு என்று இன்று நாம் பேசும் நூல்கள் தனி ஒரு புலவராலோ, ஒரு குறிப்பிட்ட காலத்திலே இருந்த பலராலோ, ஒரே இடத்து இருந்தோராலோ இயற்றப்பட்டவைஅல்ல. தனித் தனிப் பாடல்களாகக் கிடந்தவற்றைப் பின்னர் யாரோ ஒருவர் பாடல்களின் பொருள் ஒப்புமைகருதியும் பாடல்களின் அடியளவு கருதியும், பாவகைகளை ஒட்டியும், தனித் தனித்தொகுப்புக்களாக்கி இன்னவற்றிற்கு இன்ன பெயர் என்று இட்டார். அவ்வாறு இடப்பட்ட பெயர்கள்தான் அகநானூறு—புறநானூறு என்பவை.

காதலைப் பற்றி எடுத்துப்பேசி அகத்துறை இலக்கணத்திற்கு ஒத்து வருவனவற்றை, அகநானூறு என்ற தொகுப்பிலும், வீரம், கொடை முதலிய புறத்துச் செய்திகளைப்பற்றிப் பேசுவனவற்றைப் புறநானூற்றிலும் வகைப் படுத்தி வைத்தனர்.

அவ்வாறு வகைப்படுத்தி நூல்களைத் தொகுத்தது மட்டுமன்றி, நூலுக்குள் ஒவ்வொரு பாடலின் அடியிலும் அடிக் குறிப்பு முறையில் இந்தப் பாடல் இன்ன திணையைத் துறையைச் சேர்ந்தது என்ற குறிப்பும் எழுதிவைக்கப் பட்டிருக்கின்றது. இந்த வேலை இரண்டோர் சொற்களில் முடிந்திருந்தாலும், பயனுள்ள மிகப் பெரிய தொண்டாகும். சமையல் அறையில் உள்ள பொருள்கள் இன்னின்னவை என்று சிட்டு எழுதி ஒட்டியிருந்தால் புதிதாக அந்த அறையில் சமைத்தல் தொழிலில் ஈடுபடுகின்றவர்களுக்கு வேலை எளிதாகும். இல்லாவிட்டால் ஒவ்வொரு ஏனத்தையும் திறந்து திறந்து பார்த்து இது இன்னது என்று கண்டு பிடிக்க வேண்டும். தமிழ் இலக்கியத்திலும் இந்தப் பாட்டு இன்ன திணை, துறை என்று அடிக் குறிப்பு வரைந்திருப்பது, இதைப் போல் இது இன்னது என்று அறிவிக்கும் சிட்டு ஆகும். அந்தக் குறிப்பு இன்றேல் பாடலின் பொருள் விளக்கம் பெறுவதில், பாடல் வகை அறிவதில் மிக்க இடர்ப்பாடும் காலக் கழிவும் நேரும். அந்த அளவுக்கு உதவி செய்து கைகாட்டி மரங்கள்போல் அந்தக் குறிப்புக்கள் பயன் விளைத்துக் கொண்டிருக்கின்றன. பேருழைப்பை விழுங்கி இன்று நமக்குப் பெருந்துணையாக நிற்கும் அந்த அடிக்குறிப்புகளில் ஒன்று தெளிவு தருவதற்கு மாறாக் குழப்பம் தருகின்றது.

புறநானூற்றில் வீரம், கொடை, அரசியல் நிகழ்ச்சிகள்போன்றவை மட்டும் இடம் பெற்றிருக்கவில்லை. சில நல்ல காதல் உணர்ச்சிப் பாடல்களும் அந்நூலில் காணப் படுகின்றன.

காதல் உணர்ச்சியைப் புலப் படுத்தும் பாடல் என்றாலும், இன்னாரைக் குறித்துப் பாடப்பட்டிருக்கின்றது என்று வெளிப்படையாகவோ, குறிப்பாகவோ பாடலால் அறிய நேர்ந்தால் அந்தப் பாட்டைப் புறத்தில் சேர்ப்பர். வேலில் வேப்ப மாலை சூடிய வீரன் என்ற வரியால் அந்த வீரன் பாண்டிய மன்னன் என்று அறிய இடம் இருக்கின்ற காரணத்தால் ஒரு நல்ல காதல் உணர்வுப் பாடலைப் புறப்பொருள் பாட்டாக ஆக்கியிருக்கின்றனர் தமிழ்ப் புலவர்கள்.

அவ்வகையில் உள்ள புறநானூற்றுப்பாடல் ஒன்றனைக் காணுவோம்.

புறநானூற்றில் காணப்படும் பாடல்களில் ஒரு சில நல்ல அகத்துறை விளக்கப்பாடல்களாக உள்ளன. உள்ளத்து உணர்ச்சிகளை, வெளிப்படுத்தும் வகையில் அவை சிறந்த முறையில் மிளிர்கின்றன. ஆயினும் எவ்வாறோ அவையெல்லாம், அகத்துறைத் தொகுப்பினுள் இடம் பெறாமல் புறத்துறையில் இடம் பெற்றுள்ளன.

அடிபுனை தொடிகழன்
மையணற் காளைக்கென்
தொடிகழித் திடுதல்யான்
யாய்அஞ் சுவலே
அடுதோள் முயங்கல்
அவைநா ணுவலே
என்போல் பெருவிதுப்
புறுக என்றும்
ஒருபாற் படாஅ
தாகி
இருபாற்பட்ட இம்
மைய லூரே—

என்பது புறநானூற்றில் எண்பத்து மூன்றாம் பாடலாகும். இப்பாடலைப் பெருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணையார் பாடினார் என்றும், போர்வைக்கோப் பெருநற்கிள்ளி என்பானைப்பற்றிப்பாடிய பாட்டு இது என்றும் குறிப்பு கூறுகின்றது. ஒவ்வொரு பாடலும் இன்னார் பாடியது என்பதற்கும், இன்ன இடத்தில் பாடப் பட்டதென்பதற்கும் இது போன்ற குறிப்புத்தான் ஆதாரமாக இருக்கின்றது.

இந்தக் குறிப்பின்படி பாடப் பட்ட புலவர் பெயரும் தெரிந்து, தலைமகனும் இன்னான் என்று அறிய இடம் இருக்கின்ற காரணத்தினால் இது புறமாகின்றது. இந்தக் குறிப்பு பாடல் இயற்றிய ஆசிரியரால் எழுதப்பட்டது அன்று என்பதையும், பாடல் இயற்றப் பட்ட காலத்தில் எழுந்ததும் அன்று என்பதையும் நாம் நினைவில் கொள்ளுதல் வேண்டும். எனவே இவ்வடிக் குறிப்பை மட்டுமே சான்றெனக் கொண்டு பாட்டின் பொருளை ஆராயாது விடுதல் கூடாது.

“கால்களில் புனையப் பெற்ற கழல்களையும், மைபோல் கறுத்த தாடியும் உடைய இளையோன் பொருட்டு நெகிழ்ச்சியினால் என் கைவளையல்கள் கழலும்; (அதனால்) யான் தாயை அஞ்சுவேன். பேரிடும் அவன் தோள் முயங்க எண்ணினால் அவையினரைக் கண்டு நாணுவேன்; என்றும், ஒன்று எனக்காக அல்லது என் தாய்க்காகப் பேசாது இருபக்கமும் பேசும் இம்மையல் ஊர் என்னைப்போல் என்றும் வருந்துவதாக”

என்பது அந்தப் பாடலின் பொரு

னாகும். இதில் அகப்பாட்டிற்கு வேண்டும் எல்லா இலக்கணங்களும் காணப்படுகின்றன. காதலால் வாடும் ஒருத்தியின் மனம் உறும் வேதனை தெளிவாகப் படம் பிடித்துக் காட்டப்படுகின்றது. ஆயினும் இதனைப் புறநானூற்றில் சேர்த்திருக்கின்றனர்.

பெயர், நாடு, மாலை, கொடி முதலிய எதுவரினும் அதனைப் புறப்பாடலாக்குவர். இந்தப் பாடலில் அத்தகைய குறிப்பு எதுவும் இல்லை. இவரைப்பற்றி இவர் பாடியது என்ற குறிப்பு எல்லாப் பாடல்களுக்கும் இருப்பதுபோல (யாரோ பிற்காலத்தார் ஒருவர் எழுதியது) உள்ளது. பாடலில் இதற்கான சான்று ஒன்றையும் காணோம்.

எனவே உண்மையிலேயே இலக்கணம் கூறும் அமைப்புக்களின் படி இது புறப்பாடல்தானா என்பதனை ஆராய்வோம்.

1. இப்பாடலின் திணை கைக்கிளை என்று கூறப்பட்டுள்ளது. கைக்கிளை என்றால் என்ன? 'கைக்கிளை யுடையது ஒருதலைக்காமம், ஆணோ அன்றிப் பெண்ணோ ஒருவர் மனத்தில் மட்டும் காதல் எழப்பெற்று, மறுபுறத்தில், அது இல்லாமலே இருத்தல்,கைக்கிளை; ஒருதலை, ஒருபுறம் மட்டும் காதல் இருத்தல். காதல் செலுத்த இயலாத இளமைப் பருவத்தாரிடை அவர்களுடைய விடையையும் பெறாமல் ஏதேனும் சொல்லி இன்புறுதலும் கைக்கிளையே.

இந்தப் பாடலின் தலைவி, தலைவனைக் கூட இயலவில்லை என்று தான் குறிக்கின்றாள் — தன் அன்னை அறிவாளோ என்று அஞ்சுகின்றாள்—ஊரில் உள்ளவர்களை— தோழியை — நினைந்து அவர்கள் காதுகளுக்கும் தன் காதற் செய்தி எட்டிவிடுமோ என்று அஞ்சி ஏசுகின்றாள்; அவ்வளவே. தலைவனைக்கூடாமல் இருத்தலின் அதனைக் கைக்கிளை என்று சொல்ல இயலாது; அவ்வாறு சொல்வதும் இலக்கிய மரபு அன்று. மனத்தின் ஆற்றாமையைத் தலைவன் தலைவி எடுத்துச் சொல்லுவதுபோன்ற பல பாடல்களைக் குறுந்தொகை போன்ற அகத்துறை நூல்களில் காணுகின்றோம்.

பல்கால் காண்டலும்
உள்ளத்துக் கினிதே

என்றும்,

உற்று இன்புறேஎம்
ஆயினும் நல்தேர்ப்
பொய்கை ஊரன் கேண்மை
செய்து இன் புற்றனம்
செறிந்தன வளையே

என்றும் உளம் வெதும்பும் தலைவியர் இலக்கியத்தில் பலர். தலைவன் அருள் கிடைக்கவில்லையே,என்றும் காணும்போதும், கூடும் வாய்ப்புப் பெறுவோம் என்று ஏங்கும்பாடல்கள் பல உள்ளன. அந்தப் பாடல்கள் எல்லாம் கைக்கிளைக் காதலை வெளியிடும் பாடல்கள் அல்ல எனின், இப்பாடலும் கைக்கிளைக் காதல் உணர்த்துவது அன்று.

2. பாடல் வரிகளில் ஏதேனும் ஒருக்கால் அகத்துறை இலக்கணத்திற்கு மாறாக உளதோ எனக் காணுவோம்.

அடிபுனை தொடுகழன் மையணற்
காளைக்கு என்
தொடிகழித்திடுதல்
யான் யாய் அஞ்சுவல்—

காதலனை நினைந்து தலைவி மெலிகின்றமையின் கைவளைகள் கழலும் என்பது இலக்கிய மரபு. அவ்வாறு மெலிவு நேர்ந்தால் தாய் அது காரணமாகத் தன் காதலை உணர்ந்து கொள்ளுவாளே என்ற அச்சம் இத்தலைவிக்கு ஏற்படுகின்றது.

அகநானூறு அறுபதாம் பாடலில், தலைவன், தலைவியின்கையை அழுத்தப் பற்றுகின்றான் — வளையல்கள் கையில் அழுந்தி வடு ஏற்படுகின்றது. அவ்வாறு வடு ஏற்பட்டால் அதனைக் கண்டு அன்னை ஐயுறுவாள் என்று ஒண்தொடி நெகிழ்க்கா தீமோ என்று தடுக்கின்றதைக் காணுகின்றோம். தாயைத் தலைவியர் பழிக்கும் செய்திகள் இலக்கியத்தில் பயின்று வருபவையே

ஆனாது அலைக்கும் அறனில் அன்னை எனத் தாயைப் பழிக்கும் தலைவியைப் பிறிதோர் பாடலில் காணுகின்றோம். எனவே முன்னிரண்டு அடிகள் அகத்துறைப் பாடலில் வரும் தகுதி யுடையன ஆகின்றன.

3. இனி, மூன்றாம் வரியைக் காண்போம்.

“அடுதோள் முயங்கல்
அவை நாணுவல்”

தலைவி தன் காதலின் மிகுதியினால்,தானேசென்று தலைவனைக் கூடலாம் என்று எண்ணுகின்றாள். ஆனால் தலைவன் தனிமையில் இல்லாமல் பல்லோர் அவையில் உள்ளானே — எவ்வாறு ஆங்குப் போவேன் என நாணுகின்றாள்.

குறுந்தொகை முன்னூற்று ஐந்தாம் பாடலில் காமநோய் எலும்பையும் வருத்தும் வகையில் மிகுந்தாலும் நாமே சென்று அவரைக் கூடுதல் கூடாது என்ற பொருள் அமைய 'காம ஒள்ளெரி என்புஉற நலியினும் அவரோடு பேணிச் சென்று நாம் முயங்கற்கு அருங் காட்சியமே' என்று அந்த முயற்சியைக் கைவிடுகின்றாள்.

குறிஞ்சிக்கலி முதற் பாடலிலும் இதேபோல்தலைவி நாணுவதனைக் காணுகின்றோம்.

எனவே இவ்வடியும் இலக்கிய வழக்குடையதாய் அகத்துறைக்கு ஏற்ப அமைந்திருத்தலைக் காணுகின்றோம்.

இறுதியாக இருக்கும் மூன்று வரிகளைக் காணுவோம். இந்த ஊர் ஒருபாலும் சாராமல் தடுமாறுகின்றது; என்னைப்போல் இதுவும் ஆறாத் துயரில் அழுந்துக எனத் தலைவி ஊரைப் பழிக்கும் வகையில் அவை அமைந்துள்ளன.

தான் எண்ணும் எண்ணம் நிறைவேறுவதற்குக் காரணமாக இருப்போரைப் பழித்து உரைத்தல் உலகியலில் உள்ள வழக்கேயாகும்.

சங்க இலக்கியப் பாடல்களில் அகத்துறைப் பாடல்களில் ஊரைப் பழித்துப் பேசும் தலைவியர் பலரைக் காணுகின்றோம்.

நொதுமல் கழலும்
இவ்வழுங்கல் ஊர்
யானெவன் செய்கோ—
பொய்க்கும் இவ்வூரே—
ஏதிலர் என்னும் இவ்வூர்—

என்றெல்லாம் வரும் வரிகள் காதல்நோய் மிக்குள்ள தலைவியர் தங்கள் காதலுக்கு இடையூறாக ஊர் நின்றிடின் அவ்வூரையே பழித்தலைக் குறிக்கின்றன.

ஊர்—என்று பொதுவாகக் குறிப்பிடினும், அது தலைவியின் தோழியையே குறிக்கும். தோழி தனக்கு உதவி செய்யாதபோது அவளைப் பழிக்க எண்ணும் தலைவி நேரடியாகப் பழிக்காமல் இந்தஊரே இப்படித்தான் என்று ஊரின்மீது பழியைப் போட்டுப் பேசுவது உண்டு. இன்றும்கூட 'சாக்கிட்டுப் பேசுவது' என்று

இம்முறையில் உலக வழக்கு இருக்கின்றது.

எனக்கு உதவி செய்யாதிருக்கும் இத்தோழியும் என்னைப்போல இடர் உறுக என்று தலைவி அவளைத் தூற்றும் முறையில் அவ்வரிகளுக்குப் பொருள்கொண்டாலும் அது இலக்கிய வரம்பு உடையதே ஆகும்.

எந்த முறையில் நின்று பார்ப்பினும் இப்பாடல் முற்றும் அகத்துறைப் பாடலாகும் தகுதியைப் பெற்றிருக்கின்றது. நல்ல காதல் உணர்வை வெளிப்படுத்துகின்றது. தலைவியின் துயர மிகுதியை நன்கு புலப்படுத்துகின்றது.

ஒருக்கால் தலைவியின்பால் மட்டும்தான் காதல் இருந்தது தலைவன் இவளைக் கண்டு காதல் கொள்ளவே இல்லை என்பதால் இதனைக் கைக்கிளைக் காதலாக ஒருதலைக் காமமாகக்கொள்ளுவதாக வைத்துக்கொள்ளுவோம். கைக்கிளைப் பாடலாக இருப்பதினால் மட்டும் அகத்துறையினின்றும் தள்ளப்படுவது இல்லை. கலித்தொகையில் பல பாடல்கள் கைக்கிளைக் காதலைப் புலப்படுத்துகின்றன.

இதுவரை கூறிய வற்றான், இப்பாடல்வரிகளில் குற்றம் காணோம்; அவை அகத்துறைக்கு ஏற்ப அமைந்திருக்கின்றன, கைக்கிளை என்பதால் மட்டும் அகப்பாட்டு புறப்பாட்டு ஆகாது என்று அறிகின்றோம்.

ஆனால் ஏன் இந்தப் பாடல் புறநானூற்றில் இடம் பெற்றது? நக்கண்ணையார் பாடிய வேறு பாடல்களும்—இதேபோல் காதல் உணர்ச்சிப் பாடல்கள் — புறநானூற்றில் உள்ளன. ஒருக்கால் அப்பாடல்கள் அகத்துறைக்கு ஏற்புடையன அன்று எனத் தள்ளிவிடினும், இப்பாடல் அகத்துறை நூலில் இடம்பெற வேண்டிய அனைத்துத் தகுதியையும் படைத்திருக்கின்றது; இருந்தும் ஏனோ புறத்தில் சேர்த்திருக்கின்றனர்.

இந்தப் பாடல் அகத்திலா, புறத்திலா எங்கே இருக்க வேண்டும் என்பதனை இலக்கிய ஆராய்ச்சியாளர்கள் சிந்திப்பார்களாக.

★

நன்றி அறிவிப்பு

சென்னை டில்லி சட்டசபைகளுக்கு போட்டியிட்ட எங்களை அன்புடன் ஆதரித்து வெற்றிபெறச்செய்த எல்லோருக்கும் எங்களது உளம் நிறைந்த நன்றி உரித்தாகும். தங்கள் ஒவ்வொருவரையும் நேரில் கண்டு தெரிவிக்கும் நன்றியறிதலாக இதனைக் கொள்ளவேண்டுகிறோம். எமது தொகுதிகளின் மக்களாகிய தங்களின் நம்பிக்கைக்கு உரியவர்களாகிய எங்களுக்கு தொகுதிகளின் முன்னேற்றத்துக்கான சிறந்த ஆலோசனைகளைத் தந்து உதவுவதுடன் மேலும் ஒத்துழைத்து ஆதரிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். நமது மாநிலத்தின் குறைகளைக் களையவும், மக்கள் விருப்பத்தை நிறைவேற்றவும் திராவிட முன்னேற்றக் கழகத்தவர்கள் என்ற முறையில் சட்டசபையில் கடமையைத் தவறாது செய்துவருவோம்.

எங்களது வெற்றிக்கு அயராது பாடுபட்ட தோழர்கள், தாய்மார்கள், பெரியோர்கள் ஆகிய அனைவர்க்கும் எங்களது உளங்கனிந்த நன்றி என்றும் உரித்தாகும். எங்கள் வெற்றி தங்கள் வெற்றியே!

எங்கள் வெற்றிச் செய்திகேட்டு தமது அன்பு நிறைந்த வாழ்த்துரைகளைத் தமிழகத்தினின்றும் தமிழர்கள் வதியும் பிற நாடுகளினின்றும் தந்திகள், கடிதங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொண்ட அன்புடைய தோழர்கட்கெல்லாம் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தமிழும் தமிழரும் முன்னேற ஒல்லும் வகையெல்லாம் பணிபுரிவோம் என்ற உறுதியைத் தெரிவித்துக்கொள்கிறோம். வணக்கம்.

அன்பர்கள்,

ஈ. வெ. கி. சம்பத்
தர்மலிங்கம்
க. அன்பழகன்
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
களம்பூர் அண்ணாமலை
ஆனந்தன்
இருசப்பன்
மு. கருணாநிதி
ஏ. கோவிந்தசாமி
ப. உ. சண்முகம்
சத்தியவாணி முத்து
எஸ். சந்தானம்
எம். பி. சாரதி
எம். பி. சுப்ரமணியம்
எம். செல்வராஜ்
நடராசன்

தேர்தல் அங்கும் இங்கும்

இங்கிலாந்தில்தேர்தல் எல்லா இடங்களிலும் ஒரே நாளில் நடைபெறும். வாக்குப் பதிவு காலை 7-மணிக்குத் துவங்கி இரவு 9-மணிவரை நடக்கும். இரவு 9-மணிக்கு மேல் வாக்குச் சீட்டுகள் நிறைந்த பெட்டிகள் சில மணி நேரங்களுக்குள் குறிப்பட்ட இடத்திற்குப் போய்ச் சேரும். இடைவேளை கிடையாது. அதற்கேற்ற வசதிகள செய்யப்படும்.

பெட்டிகள் சேர்ந்த சில மணி நேரங்களுக்குப் பின் வாக்குப்பதிவுகள் எண்ணப்படும். மறுநாள் பகல் சாப்பாட்டிற்குள் 90 சதவிகித முடிவுகள் தெரியவரும்.

வாக்கெடுப்பிற்கு முன்பாகவே மக்கள் சபை கலைக்கப்பட்டுவிடும்.

மற்றும், யாரும் கட்சி சார்பில்லாமல் சுயேச்சையாக நிற்க முடியாது.

தேர்தலுக்கு முன் அங்குள்ள கட்சிகள் தங்கள் கட்சியுடன் அன்ருடம் தொடர்பு கொண்டவர்களையே நிற்க வைக்கும். மக்களுக்கு அறிமுகம் ஆகாதவர்களைத்திடீரென்று நிற்கவைக்க முடியாது.

அங்குள்ள ஒவ்வொரு கட்சிக்கும் முழு நேரம் பணியாற்றும் தொண்டர் (அமைப்பாளர்) இருப்பார். அவர் கட்சியின் வேலைகளைக் கவனித்துக் கொள்வார். சபைக்குப் போட்டியிடும் அங்கத்தினர்களுடைய செலவுகளைக் கட்சியே ஏற்கும். அங்கத்தினர்களுக்கு தனிப்பட்ட வகையில் சில அணுக்களே செலவாகும். கிராம வட்டாரங்களில் நிற்கும் அங்கத்தினர்களுக்குச் செலவு சிறிது கூடவும்; நகரங்களில் நிற்பவர்களுக்கு செலவு மிகச்சொற்பமாகவும் நேரிடும்.

அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கக் கூட்டங்கள் கூட்டி கருத்தை விளக்குவதும், வீடு வீடாகச் சென்று ஆதரவு தேடும் முறையும் உண்டு. அங்ஙனம் வீடு வீடாகச் சென்று ஆதரவு தேடும் முறையில் வாக்காளர் பட்டியலில் மூன்று பத்திகள் பிரித்துக்கொள்வர். ஒன்றில் தம் கட்சிக்குத்தான் அந்த வாக்கு (Yes) என்றும், இரண்டாவது பத்தியில் இல்லை (No) என்றும், மூன்ருவது பத்தியில் சந்தேகம் (Doubt) என்றும் குறிக்கப்படும். சந்தேகம் என்று குறிப்பிடப்பட்ட இடத்திற்கு மீண்டும் மீண்டும் சென்று தமது இலட்சியங்களை வெளியிடுவர் அந்தக் கட்சியினர்.

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட சுமார் 10-நாளைக்குள் சபை கூடும்.

இது இங்கிலாந்தில் நடைபெறும் தேர்தலைப்பற்றியது.

சிறுவை
அனுசூயா மோகனசுந்தரம்
மகளிர் மன்றம்
சென்னை.

ஆனால் சென்னையில் நடைபெறும் தேர்தலில் மாலை 4-மணிக்கெல்லாம் ஓட்டுச் சாவடிகள் மூடப்படுகின்றன.

ஆகவே இதை வைத்துக் கொண்டு சென்னை மாகாணத்தில் நடந்த தேர்தல் நிகழ்ச்சிகளைக் கவனித்தால் ஜனநாயகத்தை குழிவெட்டி மண் போட்டு; உத்தமர் காந்தியார் வளர்த்த காங்கிரஸ் இயக்கத்தை எந்த அபாயகரமான கட்டத்திற்கு கடத்திச் சென்றிருக்கிருர்கள் என்பது தெரிய வருகிறது.

அன்று மனேன்மணிய ஆசிரியர் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் "தெக்கணமும் அதிற் சிறந்த திராவிட நற்றிரு நாடும்" என்று கூறிய கூற்றுக்கு இன்று புத்துரைகளும், வியாக்கியனங்களும் கூறத் தலைப்பட்டு விட்டனர்.

கட்சி சார்பில்லாது, சுயேச்சையாகச் சில தான் தோன்றிகள் நின்று சூரியன் சின்னத்தை கேட்டு வாங்கிப் பார்த்தனர். இந்த அவலநிலை தமிழகத்தில் இருக்கக்கூடாது. இனி இருக்காது. 20-ஆம் நூற்ருண்டில் வசிக்கும் தமிழகப் பெருங்குடி மக்கள், கொள்கை, குறிக்கோள் இல்லாத சுயேச்சை வேடத்தில் தேர்தலில் புகுவோரை ஒதுக்குதல் வேண்டும்.

மேலும் பல்வேறு நாட்களில் வாக்குப் பதிவு செயயும் முறை நீங்கவேண்டும். பதிவான பிறகு முடிவு காண நாட்கணக்கில் காத்திருக்கும் இழிநிலையும் போக வேண்டும்.

நமது கழகம் எங்கெங்கு வட்டாரங்களில் இல்லையோ அங்கெல்லாம் கழகங்கள் தோன்றுதல் வேண்டும். சில இடங்களில் நல்ல படிப்பகங்கள் தோற்றுவித்து, அதன் மூலம் அன்ருடம் மக்களிடம் உறவு கொள்ளலாம், நமது இயக்க ஏடுகளை எங்கும் பரப்பவும் நமது இயக்கத் தலைவர்கள் கூறும் நல்லுரைகளை மக்கள் காதில் அடிக்கடி கேட்கப்படவும் நாம் முயற்சி கொள்ளுதல் வேண்டும், தாய்மார்கள், எங்கெல்லாம் மகளிர் மன்றம் இல்லையோ அங்கெல்லாம் மகளிர் மன்றத்தைத் தோற்றுவித்து அங்குள்ள மகளிரை நமது கருத்துக்களுக்கு ஈர்த்து எதிர்காலச்சந்ததிகளுக்கு ஒளி விளக்குகளாக மாற்றலாம். வீதிக்கொரு படிப்பகம் வைத்து நல்ல திருவிடத்தை அடுத்த ஐந்தாண்டிற்குள் காண விழைவோமாக.

திராவிட நற்றிரு நாட்டைக் காணும் வரை மடிதட்டி முந்துற்று ஓடிக்கொண்டே இருங்கள். எங்கும் நிற்கவேண்டாம். ஓயாது பணியாற்றுவோம். வெற்றி நமதே!!

★

வஞ்சனை நிறைந்த உள்ளம் என்றுமே முன்னேருது. ஏனென்ருல், வஞ்சனை என்பது ஒரு பெரிய பளு. எப்படிப்பட்ட மனிதனுலும் தாங்க இயலாத பளு. அதை நீக்கினுலன்றி, உள்ளத்தை அழுத்தும் சுமை நீங்காது, முன்னேற வழி கிடைக்காது.

திராவிடம், பிறக்கும்!

மலர் 15] ஆண்டு சந்தா ரூ. 7 [31—3—57] தனிப் பிரதி 2 அணு [இதழ் 36, 37

"அம்மணி! உங்கள் அப்பாவின் பெயர் சொல்லி ஓட்டுப்பிச்சைக் கேட்காதீர்கள். அது வீண்", என்று சொல்லி நேருவின் திருக்குமாரி இந்திரா அம்மையார், ஆமதாபாத் தேர்தல் பிரச்சாரத்துக்குச் சென்றபோது, குஜராத் மாதர் திலகங்கள் கூக்குரல் எழுப்பினராம்! இந்திராவின் காரினைத் தொடர்ந்து சென்ற காங்கிரஸ் தலைவர்களின் கார்களில் எல்லாம் செருப்புகளும் கற்களும் குவிந்தனவாம்!! — அந்தளவுக்கு அங்கே எழும்பியிருக்கிற மொழிவாரிமாகாண ஆசை இன்னும் அணையவில்லை. அதனை, தேர்தல் பிரச்சாரத்தின்போது மட்டுமல்ல, தேர்தலிலும் காட்டியிருக்கின்றனர் கூர்ஜரத்து மக்கள்! துப்பாக்கியும் தடியும் கொண்டு தாக்கிய காங்கிரசைக் காக்க எவ்வளவு பெரிய நேருக்கள் வந்தாலும் இயலாது என்பதை அவர்கள் காட்டிக்கொண்டது போலவே மராட்டிய மாநிலத்து மக்களும், பொதுத்தேர்தலில் தெரிவித்திருக்கிறார்கள்!! இதே கதி, மொழிவாரி அரசு கோரும், பஞ்சாபிலும், பல தரப்பட்ட சாகசங்கள் செய்யப்பட்டும்கூட நேர்ந்திருக்கிறது, காங்கிரசுக்கு. முக்கியமானவர்கள் எல்லாம் முறியடிக்கப்பட்டிருக்கிறார்கள்! அதிலும் டில்லி மந்திரிகளாயிருந்தோர் தூக்கி எறியப்பட்டிருக்கிறார்கள். இங்கெல்லாம் ஏற்பட்ட தோல்வி, காங்கிரஸ் மேலிடத்தைக் கலங்கச் செய்துள்ளதாம். கேரளம், முன்பு, ஆடும் கப்பலாகயிருந்தது! இப்போது அதுவும் காங்கிரஸ் கையைவிட்டுப் போயிருக்கிறது. ஒரிஸ்ஸாவில், ஞானதந்திர பரிஷத் எனும் கட்சி, ஆட்சியிலிருந்து காங்கிரசை அகற்றிவிடுமோ என்கிற அச்சம் ஏற்பட்டுள்ளது.

"அமோக வெற்றி! அபரிமித வெற்றி!!", என்று காங்கிரசார் ஒரு பக்கம் குதூகலமடைந்தாலும், கடந்த தேர்தலுக்குப் பிறகு, அகில இந்தியா என்று கூறப்படும் இந்த உபகண்டத்தில் ஆங்காங்கும் எழும்பியுள்ள புது ஒளியினை யாரும் தவருகக் கணக்கிடல் கூடாது.

திராவிட முன்னேற்றக் கழகத்தவராகிய நாம் சட்டசபைக்குள் நுழைவது, இது முதல் முறை! இது குறித்தும், இந்திய உபகண்டத்து வட்டாரங்கள், ஏதேதோ ஆரூடங்கள் கணிக்கத் தலைப்பட்டுள்ளன. இப்படி, தனது நாடு, தனது மொழி, தனது வட்டார பாதுகாப்பு எனும் நோக்கங்களைக் கொண்டோர், கடந்த தேர்தலுக்குப் பிறகு பெருவாரியாக அதிகரித்துள்ளனர்! பேசாத மாநிலங்கள் யாவும்கூட இன்று டில்லியின் போக்கைக் கண்டிக்க முன்வந்திருக்கின்றன!! இது, காங்கிரசுக்கு வரவிருக்கும் பெரியதோர் ஆபத்துக்கு அறிகுறி என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இந்தத் தனி மாகாண உணர்ச்சியும், தத்தமது மொழிகளுக்கு முடிசூட்டி வாழவேண்டுமெனும் ஆசையும், வளருமே ஒழிய குறையாது, மறையாது. காரணம், பன்னெடுங்காலமாகவே நாம் கூறிவருவது போன்று, இந்தியா ஒரு நாடு அல்ல! ஒரு துணைக் கண்டம்!! இங்குள்ள அனைவரையும், வெள்ளையனை விரட்ட வேண்டும் என்கிற ஒரு ஆர்வம்தான் ஒன்று திரட்டிப் போட்டிருந்தது. அந்தத் தேசிய உணர்ச்சியினை, இனி காங்கிரஸ், எவ்வளவு பெரிய நேருக்களைக் காட்டினாலும் பெறமுடியாது.

அந்தந்த மொழிவாரி அடிப்படையில் அரசுகள் அமையவும், அவைகள் தங்களைத் தாமே காத்துக்கொள்ளும் நிலைவளரவும், ஆங்காங்கு இருப்போரும் விரும்பவே செய்வர். இந்த அறிகுறியினை நாம் மறந்துவிடுவதற்கில்லை. இத்தகைய ஒரு நற்சூழ்நிலை மலர்கின்ற இச்சமயத்தில், இங்குள்ள சிலர் "திராவிட முன்னேற்றக் கழகம் சட்டசபைக்குள் பிரவேசித்துவிட்டது. ஆகவே, அது நாட்டுப் பிரிவினைப் பிரச்னையை கணிசமான அளவுக்குக் குறைத்துக் கொள்ளும்" என்று எழுதவும் பேசவும் முற்பட்டுள்ளனர். இது, அவர்களுடைய ஆசை! அவ்வளவே தவிர, திராவிடநாடு என்பது நமது உயிருக்கு ஒப்பானதுபோல. "உயிரை இழந்துவிடு! உனக்கு எழிலுள்ள பெண்ணைப் பார்த்து ஏழடுக்கு மாளிகையுடன் தருகிறோம்!!" என்று சொன்னால் என்ன பொருள்? எவன்தான் ஒப்புவான்! நம்முடைய நாட்டுப் பிரிவினைப் பிரச்னைக்கு, நல்லதோர் ஆதரவு நானிலமெங்கும் திரளும் என்கிற அறிகுறியை, அகில இந்தியாவிலும் ஆங்காங்கு அரும்பியுள்ள உணர்ச்சிகள் அறிவிக்கின்றன. இந்தக் கட்டம் வளருமே ஒழிய, கருகாது!

ஏனெனில், இந்தியா என்கிற பெயருடன் டில்லி தர்பார் நீடிப்பதனையும் அது பிற மாநிலங்களின் மென்னியை இறுக்கி நடாத்தும் செயல்களையும் நாடு உணரத் தலைப்பட்டுவிட்டது!! இந்த உணர்ச்சியினை நேருவின் வாரிசுகளால், ஒருபோதும் தடுத்திட இயலாது. ஆகவே, பல காலமாக நாம் கூறிவரும், தனிநாட்டுணர்ச்சி, தன்மொழி ஆசை, தழைக்கும் சமயம் இது. திராவிடநாடு மூலாதாரக் கொள்கைக்கு ஆக்கமும் ஊக்கமும் எதிர்காலத்தில் நிச்சயம் கிடைக்கும்; அதனைத் தடுக்கும் காங்கிரஸ், இன்றில்லாவிடினும், ஒருநாள் சாயும்; இன எழுச்சி வெல்லும்! திராவிடம், பிறக்கும்! ★

4-ம் பக்கத் தொடர்ச்சி

அவர்கள் அவ்விதம் குத்திக் குத்திக் காட்டவேண்டுமென்று நான் பணிவன்புடன் வேண்டி வேண்டிக் கேட்டுக்கொள்ளுவேன்!! தம்பி! உன் அரிய உழைப்புக்குப் பிறகும், அற்புதமான ஆற்றலுக்குப் பிறகும், உயரிய பணிக்குப் பிறகும், தூய தொண்டுக்குப் பிறகும், நாம் பல இடங்களில்,

டிபாசிட் இழந்தோம்
படுதோல்வி அடைந்தோம்

என்ற உண்மையை நாம், எக்காரணம் கொண்டும் மறந்திடக் கூடாது! நமது நெஞ்சிலே பாய்ச்சப்படும் இந்த உண்மை, வேதனையையும் வெட்கத்தையும் தருகிறது என்பதற்காக, நாம் இதனை வீசுவோர்மீது சினம்கொள்வது கூடாது — நான் சீலம் போதிக்கிறேன் என்று கேலிபேசாதே, தம்பி! அவர்கள் இந்தக் கணைகளை நம்மீது ஏவியபடி இருந்தால்தான், நாம், நமது நிலைமையைத் திருத்திக்கொண்டாகவேண்டும் என்ற உள்ளத் தெளிவினைப் பெற முடியும்!

எவ்வளவு பாடுபட்டோம், எத்துணை உழைப்பை அளித்தோம், மக்களிடம் எவ்வளவு கனிவுரை கூறி ஆதரவு கேட்டோம், எனினும,

பல இடங்களில் படுதோல்வி அடைந்தோம்.
பல இடங்களில் டிபாசிட் இழந்தோம்

என்பதை மறவாதிருப்பதுதான் இனி இத்தகைய வேதனைதரும் தோல்விகளும், எரிச்சலூட்டும் ஏமாற்றங்களும் நம்மைத் தாக்காது இருக்க, நாம் என்ன முறையில் நடந்துகொள்ளவேண்டும், நமது முறைகளில் எதனை எவ்விதம் திருத்திக்கொள்ள வேண்டும், மக்களின் பேராதரவைப் பெறுவதற்காக மேலும் எம்முறையிலே பணியாற்றவேண்டும் என்பனவற்றினை ஆய்ந்தறிந்து செயலில் ஈடுபடவைக்கும். இந்தப் பேருதவியைத்தான் நம்மைத் தூற்றுவோர் புரிகிறார்கள்! முன்னமோர் முறை, வாழ்க வசவாளர்கள்! என்று நான் எழுதியது நினைவிலே இருக்கிறதல்லவா! பொருளும் புரியுமே இப்போது.

கோபக்கனலை உமிழ்ந்திடும் குணாளர்களே! தூற்றலைத் தொண்டாக்கிக்கொண்ட தூயவர்களே! இழிமொழி பொழிந்து இன்பம் காணும் பெரியீர்! தூற்றுங்கள்! தூற்றுங்கள்! தூ! தூ! என்று நாள் தவறாமல் நாக்கு வறண்டிடு மட்டும் தூற்றிக்கொண்டே இருங்கள். கைகொட்டிச் சிரியுங்கள்! கெக்கலிசெய்யுங்கள்!

டிபாசிட்டு இழந்தனர்
படுதோல்வி அடைந்தனர்

என்பதைப் பன்னிப் பன்னிக் கூறுங்கள்—பதைக்கப் பதைக்கப் பேசுங்கள்!! ஆமாம், அன்பர்காள்! இந்தக் காரியத்தில் அகில முழுவதும் ஆசானாகத் தக்க அளவுக்கு ஆற்றலைப் பெற்று விளங்கிடும் அரசர்க்கரசர்காள்! அயர்ந்துபோகாமல் இந்த நாராசத்தை எடுத்தெடுத்து வீசுங்கள்! அப்போதுதான், எமக்கு,

சூடும்
சுறுசுறுப்பும்
சூழ்நிலை விளக்கமும்
செயல்படு முறையும்
சூரும் திறமும்
வழியும் வகையும்

நிரம்ப நிரம்பக் கிடைக்கும் — கிடைக்கப் பெற்றால்தான் இன்றைய பதினைந்து, நாளை ஐம்பதாகும் அறுபதாகும், வேதனை தரும் தோல்விகள் விரண்டோடும் செந்தேனென இனிக்கும் வெற்றிச் செய்திகள் விருந்தாகக் கிடைக்கும், எனவே, ஏசலை ஏவிப் பூசலை எதிர்பார்க்கும் இணையற்ற வீரர்காள்! நித்த நித்தம் தூற்றுங்கள், நிரம்ப நிரம்ப ஏசுங்கள், எம்மிலே, செயலற்றுக் கிடப்பவனும் துடித்தெழுந்து செயலாற்றும் செம்மலாக, உதவுங்கள்.

தம்பி! இந்தத் தேர்தலில் நாம் வேதனைப்படத்தக்க தோல்விகளைப்பெற்றோமே, அவை, நம்மை கவலைக் கடலிலே ஆழ்த்திவிட்டிருக்கும், கரை காணாமலும், உயிர்த்தெழ இயலாமலும் நாம் அதிலே அமிழ்ந்துபோயிருப்போம், நமக்கென்றே தமிழகத்தில் தனிச் சிறப்புடன் அரசோச்சி வருகின்ற வசவாளர்கள் மட்டும், கிளம்பி, வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சாதிருந்தால்! அவர்தம் இழிமொழிதான், நம்மை, சோகக் கடலிலே ஆழ்ந்துபோவதினின்றும் தப்பவைக்கிறது—அந்தோ! அயராது உழைத்த எமக்கு, அருந்தொண்டாற்றும் எமக்கு, தூயதோர் பணியிலே ஈடுபட்டுள்ள எமக்கு, தாய்த் திருநாட்டின்மீது பூட்டப்பட்டுள்ள தளைகளை நொறுக்கி எறிந்து, தன்னரசு காண வேண்டுமென்று தளராது உழைக்கும் எமக்கு, மக்கள் தம் ஆதரவு இன்னின்ன இடத்திலே இன்னமும் கிடைக்கவில்லையே. தோல்வியன்றோ துரத்திவந்து தாக்கிற்று, நமது விளக்கமும் வேண்டுகோளும், தெளிவாக இல்லையோ, நமது பணியின் மாண்பு மேலும் பண்பு பெற வேண்டுமோ, மக்களை அணுகி அளவளாவுவதிலே நாம் எடுத்துக்கொண்ட முயற்சி போதாதோ காரணம் யாதோ, நம்மை சிலபல இடங்களிலே வெற்றிபெற ஒட்டாது செய்துவிட்டனரே, நம்மைக் கெடுத்தாலும் தடுத்தாலும் பரவாயில்லை, அங்ஙனம் செய்வதன் மூலம், நாம் எந்த இலட்சியத்தைப் பரப்புகிறோமோ, அந்த இலட்சியத்துக்கு ஒரு இழிவும் இன்னலும் ஏற்பட்டுவிடுமோ, இனி அதுபோன்றதோர் இடையூறு நேரிடாதிருக்க, நாம் வெற்றிக்கான வகையில் நமது முறைகளைத் திருத்தி அமைக்கவேண்டும், ஆற்றலைப்பெருக்கிக்கொள்ள வேண்டும், கூட்டுச் சக்தியைத் தேடிப்பெறவேண்டும், மக்களிடம் உள்ள தொடர்பு மேலும் கனிவுள்ளதாகிட வழிகோலவேண்டும் —என்ற இன்னோரன்ன பிற எண்ணங்களை நாம் பெறவும், பெறுவதன் மூலம் எதிர்கால வெற்றிகளுக்கான அச்சாரம் காணவும், இழிவினைப் பழியினை, இல்லா

நன்றி

தஞ்சை மாவட்டம் கோமல் கிராமத்திலுள்ள எனது இல்லத்தில் காலஞ்சென்ற எனது பாட்டி கோவிந்தம்மாள் அவர்களது மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து, 18—3—57 அன்று ஆதித்திராவிட குழந்தைகளுக்கு உணவும் கைத்தறி ஆடைகளும் அளித்து நடைபெற்ற படத் திறப்பு விழா நிகழ்ச்சிக்கு வர இயலாது குறித்து வருந்தியும், கடிதம் — தந்தி மூலம் அன்பு தெரிவித்துக்கொண்ட தோழர்களுக்கு எங்கள் குடும்பச் சார்பில் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

காஞ்சி
22-3-57 } இராம. அரங்கண்ணல்.

தனத இட்டுக் கட்டியதை, எரிச்சலே குமுறலே, காய்ச்சலே கசப்பை, பொல்லாங்கை பொச்சரிப்பை, நச்சு நினைப்புகளை நாசக் கருத்துகளை, வாரி வாரி வீசிடும் உத்தமர்களல்லவா, உதவுகிறார்கள்! வாழ்த்திடத் தவறலாமா!! அதனால்தான், தம்பி, மீண்டும் அவர்களை எண்ணி, நெஞ்சு நிறைந்த மகிழ்ச்சியுடன்

வாழ்க வசவாளர்!

என்று வாழ்த்துகிறேன்! சோகம் கப்பிக் கொண்ட நம் உள்ளத்துக்கெல்லாம், சுறுசுறுப்பும் விறுவிறுப்பும் சுரந்திடச் செய்யும், சுடுசொல் வீசி, நம்மை எழச் செய்கிறார்கள்!! எழுந்துநின்று, துக்கத் திரையை நீக்கியபடி, சூழ்நிலையை மீண்டும், பார்க்கிறோம், ஆங்காங்கு தாரகைகள் மின்னிடத்தான் செய்கின்றன! வெற்றிக் கதிரொளியும் தெரியத்தான் செய்கின்றது! பெருமைப்படவும் பேசிப் பேசி மகிழவும் தக்க சிரிய வெற்றிகள் சிற்சில கிடைத்துத்தான் இருக்கின்றன! பாலைவனம் என்றெண்ணிப் பதைக்கிறோம், நீரோடைகள் நிரம்பித்தான் உள்ளன!! வேதனைப்படத்தக்க தோல்விகளை நாம் கண்டு கவலைப் படத்தான் செய்கிறோம், ஆனால் அதேபோது, உற்றுப்பார்க்கும் போது, கைகளைப் பிசைந்து கொண்டும் கண்களைக் கசக்கிக் கொண்டும், முணுமுணுத்துக் கொண்டும், சபித்துக்கொண்டும் நிற்கும் அன்பழிக்கும் அருங்குணத்தார்களைக் காண்கிறோம், காரணம் என்ன என்று கேட்கிறோம், அவர்கள்

ஆயாசப்படத்தக்க

அச்சப்படத்தக்க

ஐய்யோ! அம்மா! என்று அரற்றிடத் தக்க!!

அவனு! அவனு! அவனு! என்று கொதித்துக் கூவிடத்தக்க வெற்றிகளையும்

பெற்றிருக்கிறோம்!! என்பது புரிகிறது!!

அந்த வெற்றிகளால் நாம் அடக்கமுடியாத நம்பிக்கைப் போதை கொள்ளாது தடுத்திட, வேதனை தரும் தோல்விகளும், அவைதமைக் குறித்து வீசப்படும், வெந்தழலினும் கொடிய வசைமொழிகளும், பயன்படுகின்றன; அதுபோன்றே நாம் அடைந்த தோல்விகள் நம்மைத் துளைத்துத் துளைத்து செயலற்றவர்களாக்கிடும் போது, பெற்ற ஒருசில வெற்றிகள், பளிச்சிட்டுக் காட்டி, நம்மை, பாதையை மறவாதீர்! பணிபுரியத்தவறுதீர்! சோகக் கடலில் ஆழ்ந்திடாதீர்! சொல்லம்பு கண்டு நிலைகுலையாதீர்! வெற்றி இதோ காணீர்! வேதனையைத் துடைத்துக்கொண்டு, புதிய வேகத்துடன் பணியாற்றி, மேலும் பலப்பல வெற்றிகள், வேதனையைத் துடைத்திடத்தக்க வெற்றிகளைப் பெறவாரீர்! என்று அழைத்திடக் காண்கிறோம்— தன்னடக்கமும் பெறுகிறோம், தன்னம்பிக்கையையும் மீட்டுக்கொள்கிறோம், தம்பி! இதுதான், இன்று நமது நிலைமை!! சிந்தித்துப் பார், சிறிதளவு உன்னிப்பாக—பிறகு, மீண்டும் ஓர் முறை படித்ததைத் திரும்பப் படித்துப் பார், படமும் தெரியும் பாடமும் கிடைக்கும்!!

நூறு இடங்களுக்கு மேல் தேர்தலில் போட்டியிட்ட 'இதுகள்' கேவலம் பதினைந்து இடங்களிலே தான் வெற்றிபெற முடிந்தது, என்று பேசுகிறார்களல்லவா, தம்பி, அவர்களை, நான் மூன்று வகையினராகக் காண்கிறேன்.

1. **அதனையும் செய்ய இயலாதார்**
2. **அதைக் கண்டே அச்சம்கொண்டார்**
3. **அது நமக்குப் போதுமே என்று அங்கலாய்ப்போர்!**

அண்ணா! இப்படி ஏன் சுற்றி வளைத்துப் பேசுகிறாய், சுருக்கமாக இன்னின்ன கட்சிகள் என்று தான் கூறிவிடேன், என்று கேட்கிறாய், தம்பி தெரிகிறது, நீயே தான் அந்த வேலையைச் செய்து விடேன்!

காங்கிரஸ் கட்சி, நம்மைவிட அதிகமான இடங்களிலே தேர்தலில் ஈடுபட்டது, பெருவாரியான இடங்களில் வெற்றிபெற்றிருக்கிறது, முறையும் நெறியும், பிறகு கவனிப்போம்—வெற்றிபெற்றிருக்கிறது — எனினும் மிகமிகக் குறைந்த அளவு இடங்களையே பெறமுடிந்த, நம்மிடம் அந்தப் பெரிய கட்சி, அலட்சியமாகவா நடந்துகொண்டது!! ஊர் உலகம் அறியுமே, நம்மை வீழ்த்த, காந்தியாரின் கண்ணீரைப் பன்னீராக்கிக் குளித்து மகிழ்ந்திடும், அந்தக் கட்சி, எவ்வளவு உழைத்தது, உழன்றது, ஊரை அடித்து உலையில் போடுபவனுடைய கரத்தைப் பிடித்துக்கொண்டு, இது கையல்ல.........என்று என்னென்ன சொல்லி, கெஞ்சிக் கூத்தாடிற்று, எவ்வளவு எவ்வளவு கொட்டிற்று என்பதனை எல்லாம் அறியாதார் யார்?

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு போதுமல்லவா, பதம் பார்க்க! இதோ, பார்!!

சாத்தூர் தொகுதியில் தேர்தலுக்கு நின்றார் முதலமைச்சராக இருக்கும் காமராஜர்! அந்த மூலாம் கலையாதிருக்கும், நிலையுடன்!!

காமராஜருக்கு, பெரியாரின் பேராதரவு எனும் புதிய கவசமும் கிடைத்தது!

ஆச்சாரியாரை வீழ்த்தியவர் என்ற 'விருது' வேறு அவருக்கு ஏற்கனவே இருக்கிறது.

தேர்தல் காரியத்திலே 'அசகாயச் சூரர்' என்று புகழ் சூட்டப் பட்டவர்.

களத்திலே ஈடுபடுமுன்பே உழைப்பாளர் கட்சியை ஒழித்துக் கட்டியதன் மூலம், ஒரு பலமான எதிரியைப் பக்குவமாகத் தன் முகாமுக்கு இழுத்துக்கொண்டவர்.

இவ்வளவு ஆற்றலுள்ளவர் காமராஜர் — தேர்தலுக்கு நின்ற இடமோ, சொந்தத் தொகுதி!

எதிர்த்து நின்றாரே, **ஜெயராம ரெட்டியார்**, அவரை, தம்பி, உனக்குத் தெரியுமா? ஊராரைக் கேட்டுப் பார், தெரியுமா என்று?

ஜெயராம ரெட்டியாரின் அறிவாற்றல், தேசத்தொண்டு, தகுதி திறமை, நேர்மை நாணயம் ஆகியவைபற்றி, இந்துவோ, மித்திரனோ, தினமணியோ கல்கியோ, விகடனோ வேறு இதழ்களோ, எழுதிப் படித்ததுண்டா— நீயோ, நாடோ? இல்லை!

அவருடைய படங்களைப் பத்திரிகைகள் வெளியிட்டனவோ? இல்லை!

அவர்தான், ஊரறிந்த உலகறிந்த, முதலமைச்சராகவும் பெரியாரின் பேரன்பராகவும் கொலுவீற்றிருக்கிற, காமராஜருக்குப் போட்டி!!

டிபாசிட் கிடைக்கலாமா? இப்படிப்பட்ட, அசகாயச் சூரரை எதிர்க்கிறவருக்கு!!

தலைமுறை தலைமுறையாகத் தமிழர்கள், காமராஜரைப் பூஜை செய்யவேண்டும் என்று, பூஜா முறைகளே புரட்டு என்று ஐம்பதாண்டுகளாகப் போதித்து வரும் பெரியாரே பேசுகிறார். அப்படிப் பட்ட, தமிழரின் பாதுகாவலர் தேர்தலுக்கு நிற்கும்போது, யார், எவர் என்று ஊரார் ஆவலுடன் கேட்டுக்கேட்டு விவரம் கிடைக்கப் பெறாமல் திண்டாடும் நிலையில், ஒருவர் போட்டியிடுகிறார், அவரை வீழ்த்திய விருதுநகரார், பெற்ற அதிக ஓட்டுகள் எத்தனை? தம்பி! சாத்தூரில், காமராஜர் போட்டியிட்டாரே, நமக்குத்தான் காமராஜரை கவிழ்ப்பதுதான் வேலை என்ற அரசியல் இரகசியத்தை பெரியார் தமது முழு ஆற்றலையும் கொண்டு கண்டுபிடித்து, உலகம் உய்யட்டும் என்ற உயர்ந்த நோக்குடன் இந்த உண்மையை நாளைக்குப் பத்து கூட்டங்கள் மூலம் எடுத்துரைத்து வந்தாரே,—அவருடைய அபூர்வ கண்டுபிடிப்பு உண்மை என்றால், நாம், சாத்தூர் சென்று, காமராஜருக்கு ஓட்டுப் போடாதீர்கள் என்று பேசியிருக்க வேண்டுமல்லவா?

நானோ, ஆசைத்தம்பியோ, அன்பழகனோ சம்பத்தோ, கருணாநிதியோ கண்ணதாசனோ, சிற்றரசோ சண்முகமோ, சத்தியவாணியோ நடராசனோ, யாராவது சாத்தூர் சென்றோமா? சென்று, ரெட்டியார் நல்லவரோ கெட்டவரோ அது ஒருபுறம் கிடக்கட்டும்,

சங்கரலிங்கனாரைச் சாகடித்தவருக்கு
சென்னைக்குத் தமிழ்நாடு என்ற பெயர் வைக்காதவருக்கு
தேவிகுளம் பீர்மேடு பறிகொடுத்தவருக்கு
ஓட்டுப் போடாதீர்கள்!

என்று பேசி இருக்கக் கூடாதா? நமது பிரச்சாரம் அங்கும் மும்முரமாகி இருந்தால், காமராஜரின் வெற்றிக்கு ஆபத்து ஏற்பட்டிக்காதா? நெஞ்சில் கை வைத்து சொல்லச் சொல்லுங்கள் — நெஞ்சில் நேர்மைக்கு இடம் தருபவர்களே!! அரசியல் நாகரிகம், நம்மை சாத்தூர் பக்கம் போகவிடாமல் தடுத்தது! ஆனால் அவர்? ஆழம் தெரியாமல் காலை விடுகிறார்கள் — அகப்பட்டுக் கொண்டு விழிக்கப் போகிறார்கள் என்று அரசியல் பேசுகிறாரே அந்தக் காமராஜர், 100 க்கு 15' என்ற கேலிக்கு இலக்காகி உள்ள நாம், தேர்தலில் ஈடுபட்டபோது,

வராத இடம் உண்டா?
வரிந்து கட்டாத நாள் உண்டா?
பம்பரம் போல் சுழன்றாடவில்லையா?

இப்போது மூன்று வகையினர் குறித்து நான் குறிப்பிட்டிருக்கிறேனே, அதிலே, இரண்டாவது வகை, யார் என்று, யோசித்துப் பாரேன்! புரிகிறது!! அது போன்றே, மற்ற இரண்டு குறித்தும், சிந்தித்துப் பார், படமும் தெரியும் பாடமும் கிடைக்கும்.

அண்ணன்,

அறிக்கை:—

"திராவிட நாடு"

1. வெளியாகும் இடம் ... 95, திருக்கச்சிநம்பி தெரு, காஞ்சிபுரம்.
2. வெளியிடும் நாட்கள் ... வாரம் ஒருமுறை
3. அச்சிடுவோரின் பெயர் ... சி. என். அண்ணாதுரை
   இனம் ... ... திராவிடர்
   முகவரி ... ... 95, திருக்கச்சிநம்பி தெரு, காஞ்சிபுரம்.
4. வெளியிடுவோரின்பெயர்... சி. என். அண்ணாதுரை
   இனம் ... ... திராவிடர்
   முகவரி ... ... 95, திருக்கச்சிநம்பி தெரு, காஞ்சிபுரம்.
5. ஆசிரியரின் பெயர் ... சி. என். அண்ணாதுரை
   இனம் ... ... திராவிடர்
   முகவரி ... ... 95, திருக்கச்சிநம்பி தெரு, காஞ்சிபுரம்.
6. பத்திரிகையின் உரிமையாளர்களுடைய பெயர்களும் முகவரியும் அல்லது பத்திரிகையில் ஒரு சத விகிதத்திற்கு அதிகமான மூலதனம் போட்டுள்ளவர்களின் பெயர்களும்முகவரியும் ... சி. என். அண்ணாதுரை, 95, திருக்கச்சிநம்பி தெரு, காஞ்சிபுரம்.

என் அறிவிற்கும், நம்பிக்கைக்கும் நன்கு தெரிந்த மட்டில், மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என்று சி. என். அண்ணாதுரையாகிய நான் அறிவிக்கிறேன்.

25—3—57 (ஒப்பம்) சி. என். அண்ணாதுரை
வெளியிடுவோர்.

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில் ... அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.